1993 ஏப்ரல் 27]

பேரவைத் தலைவர்

1993ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்).

(அ) கூடுதல் விற்பனைவரி (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன் வடிவுகள் அறிமுகம் செய்தல்.

1993ஆம் ஆண்டு தமிழ் நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய மாண்புமிகு வருவாய்த் துறைஅமைச்சர் அனுமதி கோருவார்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1993ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)
மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) வேளாண் வருமான வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1993 (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.